ஓலை 137| ஓசை 260| ஆகஸ்ட் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை








## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது

## பொருள்

ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும், அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால் அதுவே அவனுக்கு நல்லது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நைபவர் எனினும் நொய்ய வுரையேல்!

பா வகை: ஆசிரியத் தாழிசை




சின்ன பூச்சிப் புழுவாய் எளியரை
எண்ணி நொய்ய உரைக்க லாமா?
என்றும் சமமாய்ப் போற்றல் கடனே!

ஏழைப் பாமரர் என்றே எளியரைத்
தாழ நொய்ய உரைக்க லாமா?
ஏழையைச் சமமாய்ப் போற்றல் கடனே!

நைந்தே கிடப்பதால் நாராய் எளியரை
நைந்திட நொய்ய உரைக்க லாமா?
மைந்தராய்ச் சமமாய்ப் போற்றல் கடனே!




### இலக்கணக் குறிப்பு:

ஒரு பொருள் மேல் மூன்று மூன்று அடிகளாக மூன்றடுக்காய் அடுக்கி வருவது ஆசிரியத் தாழிசையாகும். கூர்ந்து நோக்கினால் முதலடியின் நான்காம் சீரும், இரண்டாம், மூன்றாம் அடியின் முதல் சீர் தவிர்த்து மற்றச் சீர்கள் மடக்கி மடக்கி மூன்று பாடல்களிலும் வந்துள்ளன. இதனால் ஒன்றாய் ஒழுகி வந்த ஓசை நயமும், பொருளும் கோவையாய் வந்த ஆசிரியத் தாழிசை என்பதாகும். இவ்வாசிரியத் தாழிசை மூன்றடுக்காய் இல்லாமல் தனித்தும் வரும்.

பா வகை: தூங்கிசை அகவற்பா

மலர்களின் நறுமணம்
மகிழ்வினை அளித்திட
மலரினில் வளியுமே
மயங்கியே உராய்ந்திட
அலர்ந்திடா அரும்புகள்
அசைந்திடக் குழந்தைகள்
அலறலாய் நகைத்திட
அலம்பினத் தருக்களே.



வளியுமே புகுந்திட
வருடின இலைகளே
களிப்புடன் குழந்தைகள்
கவவியே நுழைந்திட
அளிமிகு மலர்களும்
அதிர்வுடன் அசைந்திட
ஒளிநிறை கதிரவன்
ஒளிந்ததே கடலிலே.

கவிஞர் செ. கலைவாணி

# நிதானத்தின் அவசியம்

நிதானம் தானே நிலைக்க வைக்கும்
மதியிலும் தெளிவை மலரச் செய்யும்
உதவா(து) அவசரம் ஒருநாள் கூட
பதட்டம் கொடுத்தே பண்பினை அழிக்கும்

பொறுமை அதுவே பொறுப்பாய் இருந்தால்
பெறலாம் மதிப்பு பேறாய் நாளும்
அறிவைத் திறக்கும் அமைதி நிலையே
அறிவாய் மனமே அவசரம் விடுத்து

நிதானம் தொலைத்தால் நிம்மதி தொலையும்
வதைக்கும் வலியை வரிந்து வாங்கும்
எதிலும் தேவை என்றும் நிதானம்
அதிலும் முடிவில் அழகாய் வேண்டும்



கவிஞர் பூர்ணிமா சங்கர்

# அன்னை மடியில் (தாய் பாசம்)

துன்பம் மறந்து
துயிலுகின்ற கட்டிலாம்
இன்பத்தை நாளுமே
ஈந்திடும் வட்டிலாம்

அன்னை மடியில்
அயர்வது சொர்க்கமே
என்னைத் தழுவியே
ஏக்கங்கள் தீர்க்குமே

இன்னல் நிலையை
இனிதென ஏற்பாளே
தன்னை மறந்து
தவமென நிற்பாளே

கன்னித் தமிழை
கனிவாய் புகட்டியே
நன்னிலம் போற்றிட
நன்றாய் வளர்த்தாள்

கருவில் சுமந்திட்ட
கற்பின் தருவே
அரும்பிடும் ஆசையினில்
அன்பின் உருவே

கரும்பின் சுவையாய்
கனிந்த மனதா(ல்)ள்
விரும்பும் குணத்தாள்
வசந்தாவாம் என்தாய்

எருதாய் உழைத்தாளே
ஏற்றம் தரவே
தருமங்கள் நன்றாய்
தவறாமல் செய்தால்

பிறப்பின் பழுதை
பெரிதாய் நினையாள்
இறக்கும் வரையில்
இடுப்பில் சுமந்தாளே

தாயின் மடியே
தரணியில் சொர்க்கமாம்
சேயின் மனதாலே
சேர்ப்பாளே பக்கம்

இழந்திட்ட தாய்மடி
இன்றும் வருமா
இழந்திட்ட சொர்க்கம்
இனியும் தருமா

ஒருமுறை வந்துவிடு
உன்மடி சாய்ந்திட
திருமுகம் கண்டிட்டால்
தீர்ந்திடும் ஏக்கம்

இருபத்து ஆண்டுகளாய்
ஏங்கும் மனதின்
வருத்தத்தை தீர்த்திட வந்து!



கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம்

# நீ என்னை விட்டுச் செல்வாயா

நீ என்னை விட்டுச் செல்வாயா
இரவு நட்சத்திரமின்றி காலியாகும் போல,
என் உயிரும் வெறுமையாய் சிதறி விடும்.

நீ என்னை விட்டுச் செல்வாயா
காற்றில்லா கடலாய் அமைதியில் மூழ்கி,
என் இதயம் திசையற்று தத்தளிக்கும்.

நீ என்னை விட்டுச் செல்வாயா
வேரிழந்த மரம் போல நிழலின்றி நின்று,
என் கனவுகள் எல்லாம் உலர்ந்து போகும்.

நீ என்னை விட்டுச் செல்வாயா
ஆனால் உண்மை என்னவெனில்,
உன் நினைவுகளை யாரும்
என்னிடமிருந்து எடுத்துச் செல்ல முடியாது.



கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

# சாயல்


அவன் ஓவியங்களில்
எப்போதும்
பரிட்சையமான
முகங்களின் சாயல்
காணப் பெறும்.

புகழ் பெற்ற ஓவியனாய்
எல்லாமும்
வரைந்து முடித்திருப்பினும்
குறைவொன்றிருக்கிறது
அவனுக்கு.

இதுநாள் வரை
தூரிகை கொண்டு
பிணத்தை வரைந்ததில்லை
அவன்.

இன்று
வரைய முற்பட்டு
வரைந்து முடித்திருக்கிறான்.

அச்சு அசல் அவன்
சாயலில் இருக்கிறது
பிணம்!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

வேதனை வந்தால் என்ன?
வலி கொன்றால் என்ன?
சதி சிதைத்தால் என்ன?
சர்வமும் எதிர்த்தால் என்ன?
எழுதி வாழ்ந்திருப்பேன்!
எழுத்தில் வாழ்ந்திருப்பேன்.



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்

# நீத்தார் பெருமை

அழுக்காறு தவிர்த்தே புவியில் வாழ்ந்தார் சிறப்பை
ஒழுக்கம் நிறைந்த சான்றோரென நூல் விளம்பும்.
துறவறம் பூண்டோரின் பெருமைகள் சொல்லில் அடங்கா
பிறந்தார் இறந்தார் கணக்கு எண்ணில் அடங்கா
பிறப்பு வீட்டின் தன்மையை துறவு கூட்டும்
சிறப்பான பொருளின் விளைவை நிலம் காட்டும்
பலயானையின் மதத்தை அடக்க அங்குசம் போலே
ஐம்புலனை அடக்க அறிவை ஆயுதமாக்கி முத்திரை பதிப்பாய்
இந்திரியங்களை அதன் வழி விடாமல் அடக்கிடின்
இந்திரனே உந்தன் பெருமைக்குச் சான்றாய் கிடப்பான்
புலன்களை அடக்கி ஆள்பவரை பெரியோர்
நலங்கெட்டு அடக்காமல் வீழ்பவரே சிறியோர்
ஐவகை அறிந்தானது ஆறறிவின் நலத்திலே
ஐந்தடக்கலாய் அடங்கிக் கிடக்கிறது உலகின் பலனே
மறைமொழி காட்டிடும் துறவியர் பெருமையை
திரையிட்டு மறைக்க முடியாது பிறவியின் அருமையை
நற்குணக் குன்றேறி நிற்கும் துறவியின் சினமோ சிறிதே
சொற்பதமின்றி பேசியோர்க்கு தாங்குதல் அரிதே
அனைத்து உயிர்கள் மீதும் அன்பு பூண்டவரே அந்தணர்
தினையளவும் குறையாத பாசம் தந்தனரே



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# வான் மழை போற்றுவோம்

கடலின் நீர் ஆவியானால் மேகம் திரளும்
கருத்திட்டால் புவிமீது மழையாய்ப் பொழியும்
அடைகாக்கும் பறவைபோல வானாம் அன்னை
அந்தந்த பருவத்தே உயிராய் அனுப்பும்

தடையென்றே நீர்வழிகள் அடைப்புச் செய்யின்
தன்மை மாறி வெள்ளத்தே ஊரும் சூழும்
கொடையென்றே வான்மழையும் வாரா வேளை
குன்றிட்டே பல்லுயிரும் காய்ந்து மடியும்

ஊர்தோறும் நீர்நிலைகள் காண வில்லை
உருப்படியாய் மீட்டிடவும் துணிவார் இல்லை
தீர்வாகும் திட்டங்கள் ஏதும் உண்டா
செயல்படுத்தும் நிவாரணங்கள் ஒருநாள் கூத்தா

ஆர்ப்பரிக்கும் வெள்ளநீரை பயனாய்க் கொள்ளின்
அருகாமை மாநிலத்தார் தயவும் வேண்டேல்
நீர்சேமிப்(பு) இல்லாக்கால் மழையும் வீணாம் ;
நிலத்தடியில் நிலைக்கச்செய் திடல் நின் கடனாம் !




கவிஞர் ஆ. சீ. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# தேவதை கடந்த சாலை

தேவதை வருகைக்காக
காத்திருக்கும் சாலை.
வருகைப் பார்த்து
வட்டமிடும் விழிகள்.

மெல்லத் திறந்த மனம்
மௌனம் கலைந்த வாய்.
மழை வரைந்த ஓவியம்
காட்சிப் பிழையாக நீ.
தேவதை கடந்து செல்ல
நிறைந்த நெஞ்சம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

கண்டதும் காதல்
இடைவிடாது ஈர்ப்பு
மாற்றத்தினால் ஒரு சந்திப்பு
கண்டும் காணாத போல் நடிப்பு
பார்த்தால் மறைப்பு
ஒளிந்தால் தவிப்பு
ஏக்கத்தினால் எதிர்நோக்கும் பார்வை
எண்ணத்தினால் இணையும் இதயம்
காத்திருப்பின் வலி
நரகத்தை விட கொடுமையானது
இசைத்தால் சங்கீதம்
பிரிந்தால் பரிதாபம்
பாசத்தை பரிமாறும் பறவையாக
சிறக்கடிக்கிறாள் அவள்.
ஒரு தல காதலுடன்
அவனின் அன்பிற்காக.



கவிஞர் மோனிஷா

# நானும் நீயும் நாமாவோம்

அழகிய மலரே
அந்திவான நிலவே
அன்பில் கரைந்தேன்
அரவணைப்பில் மகிழ்ந்தேன்

அன்னத்தின் மென்மையே
அன்பான பெண்மையே
விழிகள் விரிந்திட
வியப்பும் மேலிடுதே

ஆர்ப்பரிக்கும் இதயத்தில்
ஆனந்தம் எந்நாளுமே
எனக்கானவளே என்னுள்
எண்ணங்களாக கலந்தவளே

எழிலான தேவதையே
எந்நாளும் உன்னினைவே
வருடும் தென்றலாய்
வசந்தத்தின் வரவானவளே

தடாகத்துத் தாமரையே
தன்னிலை மறந்தேன்
நானும் நீயும்
நாமாவோம் வாழ்வினிலே

இன்பங்கள் பூத்திட
புத்துணர்ச்சி அடைவோமே
இளமையும் இனிமையும்
இதமாகும் சங்கமத்திலே



ஆனந்தத்தின் எல்லையில்
ஆசாபாசத்தின் கனிவே
ஒன்றான நெஞ்சமதில்
ஒருபோதும் பிரிவில்லையே

ஓராயிரம் ஆசைகள்
ஓய்ந்திடாது எந்நாளுமே
ஐக்கியமானாய் உயிரிலே
ஐயமில்லாத உறவிதுவே

கவிஞர் ஜெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# கேப்டன் விஜயகாந்த்

அன்னமிடும் அன்னல் இவர்!
அரசியலில் அரியாசனம் காணது
மக்களின் மனதில் சிம்மாசனம் கொண்ட
மாண்புமிகு மனிதர் இவர்!
ஆவேசம் இவரது பிறவி குணம்
அநியாயங்களை தட்டி கேட்க
ஒருபோதும் கொள்ளமாட்டார் துவேசம்!
இயற்கை இன்னல்கள் எதுவந்த போதிலும்
முதலில் நீள்வது இவரின் உதவிக்கரம்!
ஈகை இவரது பிறவி குணம்
ஈதல் இவரின் இயல்பு குணம்!
கேட்கும் முன்னர் உதவிடும் வள்ளல் குணம்!
ஊக்கம் தந்து ஊக்கு விற்பவனையும்
உலங்கூர்தி ஓட்ட வைக்கும் உயர்ந்த குணம்!
எளிமை இவரின் அடையாளம்
அதை உணர்ந்து கொண்டவர்கள் இங்கு ஏராளம்!
ஏற்றம் பல கண்டவர்
இளைஞர்களை வாழ்கையில்
ஏற்றம் காண வைத்தவர்!
ஏழைகளின் புதல்வனாய்
இந்த மண்ணில் தோன்றிய ஏகம்பன் இவர்!
ஐயம் என்பதே இல்லா மனிதர் இவர்!
ஒழுக்கம் இவரது பண்பாகும்
ஒற்றுமை இவரது மந்திரமாகும்!
ஓடி ஓடி உழைப்பவர் இவரே
உழைப்பாளர்களின் குரலாய்
குரல் கொடுத்தவரும்இவரே!
உலகுக்கெல்லாம் கொடுத்து சிவந்தவரும் இவரே!
ஔசித்தியம் பார்க்கமாட்டார்
ஔதாரியம் இவரது பிறவி குணம்!
அநீதிக்கு எதிராய் ஆயுதம் எடுக்கவும் தயங்கமாட்டார்!
அன்பெனில் அரவணைத்து கொள்ளவும் தயங்க மாட்டார்!
வாழ்க வாழ்க வாழ்கவே கேப்டன் புகழ் வாழ்கவே!



**கவிஞர் தினேஷ் கண்ணா**

ஞாபகங்கள் பொக்கிஷம்

கண்ணீர் துளிகளை
அன்பாக சுமக்கும் கருவி

இதய வலிக்கு இதமான மருந்து

ஞாபகம் தீராத தாகம்

தனிமைக்கு உகந்த வரப் பிரசாதம்

எட்ட முடியா தூரமாக இருக்கும்
உறவின் சங்கமம்

நெஞ்சுதனை ஓரமாக
மௌனம் காக்கும் புத்தகம்

ஞாபகத்தை சுமக்க புறப்பட்டால்
துண்டிக்கப்படும் நம் பயணம்

காலங்கள் மாறினாலும்
ஞாபகம் நீங்கா வண்ணம் கொண்டவை

நம் எதிர்காலத்தை பாதிக்காத
ஞாபகங்கள் என்றும் இனியவை



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

# மரமும் பறவையும்

இரட்டை சிறகை
வைத்து கொண்டு
பறக்கிறாய்;
இலைகள் எல்லாம்
எனக்கு சிறகுகள்
தானே நானும்
அசைத்து பார்க்கட்டுமா?



உன் அலகுகளால்
என்னை குத்துவது
தாயின் மார்பில்
மழலை உதைப்பது போல்
சுகமாக இருக்கிறது!

என்னில் நீ கட்டும் கூடு
உன் குஞ்சுகளுக்கு
மட்டுமல்ல உனக்கும் கூட
ஒரு கருவறை போலத்தான்!

நீ வந்தமர்ந்த பின்பு தான்
என் கிளைகள் எல்லாம்
பூரிப்படைந்தன; ஏனெனில்
அப்பொழுது தானது
பூப்படைந்தன!

உன் கீச்சொலியும்
காதல் சரசங்களும்
என் உயிர்ப்பை
மெய்பித்து
கொண்டிருக்கும்
ஆன்மயியக்கம்!

உனக்காக என்னில்
வசந்தம் எப்பொழுதும்
நிலைத்திருக்க
ஆசைக்கொள்கிறேன்!

கவிஞர் கவி. சுகரத்னம் (இர. தியாகராசன்)

# நீதி

நிம்மதி வாழ்வின் நியதியை பெருக்கி
சம்மதம் இன்றியே சங்கடம் தந்திடுமே
ஆளுக்கொரு நீதி ஆன்றோர் விரும்பாமல்
தோளாய் நின்று துணையை கெடுக்குமே

தவறு செய்தோர் தப்பித்து வெளியிலே
தவறே செய்யாதவர் தண்டனை வலையிலே
தீர்ப்பும் வெவ்வேறு தீராத வகையில்
தெருவில் தள்ளுமே தெரிந்தே வெல்லுமே



புத்தம் புதுமையில் புலமையை தந்தே
நித்தம் வலிமையில் நிறுத்துமே உண்மையை
வழக்கின் தன்மையை வசதியில் உயர்ந்தும்
ஏழ்மையை ஒதுக்கி ஏளனம் பேசுமே

சட்டம் கடமையை சலித்து கொடுத்து
திட்டம் போட்டே திருடும் உரிமையை
காக்கும் பண்பை கல்வியாளர் கனிந்தே
ஊக்கம் கொடுப்பாரே உத்தமர் போலே

தீயோர் உறவும் தீண்டும் பாம்பாய்
பாரோர் மகிழ பரிசாய் நிற்குதே
சட்டம் கடமையை சரிவர செய்யாமல்
திட்டம் யாவுமே திணறியே நிற்குமே

ஊட்டம் தந்திடும் உறவின் சிறப்பில்
நாட்டம் பெருக்குமே நானிலம் மகிழவே
மட்டம் தட்டியே மகுடம் தடுத்து
கூட்டம் ஒன்றுமே கூடியே நிற்குமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# புகையோடு வீழ் மனிதா!

உனக்காய் பிறந்தவளும் அழுகிறாள்.
உன்னால் பிறந்தவளும் அழுகிறாள்.
நீ மட்டுமேனோ சிரிக்கின்றாய்?
உன் முன்னால் மண்டியிடும் உறவுகளைப்பார்.

எங்கேயோ தொடங்கிய உன்பயணம்.
வாழும் இளவயதினிலே முற்றுப்பெறுகிறதே.
புகையால் உன்னை நீ மறந்தாய்.
உன்னால் வாழ்வதைத் தொலைக்கிறாள் உன்னவள்.


யார் சொல்லியும் கேட்காத நீ.
நான் சொன்னால் மட்டுமேனோ கேட்பாயா.
நிலைமாறிய உலகில் நீ மட்டுமென்ன விதிவிலக்கா.
நீயும் ஒரு சராசரி மனிதனே.

மனிதா புகையதை நீபுசித்தால்
உன்வாழ்வதை அதுபுசிக்கும்
உன்வாழ்வதை நீயோசி.
முடிவதை நீயெடு.



கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

உண்டு என்பதும், இல்லை என்பதும்,
அதற்கு எதுவும் இல்லை!



நித்தமும் பழகும்
நீர் பூசனையும்
மலர் பூசனையும்
பல வித சாத்திரங்கள் சாற்றும்
சாங்கியங்களும்
சட்டமாய் செய்க!

செய்தலில் செயலின்மை
செம்மை ஆகும்

அகக்கண் திறக்க.
புறக்கண் செயலிழக்கும்

சொல்லாத சொல் ஒன்று
சொல்லும் பொருள்

அறிய, அறியா கணத்தில்
ஞான ஊற்றின் கண் திறக்கும்.

அன்று
அக பூசனையில் ஆத்மநாதன்
தன்னைத் தானே காண
புற பூசனை தானே உதிரும்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# விநாயகரின் மகிமைகள்



விநாயகர் முழு முதல் கடவுள்
விநாயகரின் தும்பிக்கை
நம் வாழ்வில் நம்பிக்கையாகும்.
விநாயகரை வேண்டிய கணமே
வேண்டுதலை நிறைவேற்றி தருபவர்.
அருகம்புல் கொண்டவரே
ஆனைமுகன் ஆனவனே.
ஐந்து கரம் கொண்டவரே
ஆசையை அகற்றுபவரே.
விநாயகர் சங்கத்தமிழ் தருபவர்;
சமயத்தில் வருபவர்
பக்தியுடன் மனதார வேண்டிக்கொண்டு
எருக்கம் பூவை மாலையாக சாற்றும் போது
நினைத்த காரியம் நிச்சயம் நிறைவேறும்.
அருக்கம்புல்லால் அகம் மகிழ்ந்து வரம் தருபவரே.
இரட்டைப் பிள்ளையாரை வணங்கும் போது
வாழ்வில் வரங்களை நிச்சயம் அருள்பவர்.
விநாயகர் கையில் சித்தி புத்தியுடன் வீற்றிருக்கிறார்.
விநாயகரை மனதார வேண்டிக் கொண்டால்
வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் அருள்பவர்.
விநாயகரின் மகிமைகள் மஞ்சள் பிள்ளையார் தான்.

கவிஞர் மா. நந்தினி, சேலம்

# வா! வாழ்ந்து காட்டலாம்!



வெற்றியோ? தோல்வியோ?
விடியலைத் தேடி புறப்படு.
தோல்விக்கு புறமுதுகு காட்டியே
வெற்றியைத்தேடி வீரநடை போடு.

உன்னில் உள்ள பயங்களையும்
தாழ்வுமனப்பான்மைகளையும்.
அலைகள் சுழலும் கடலில் வீசு.

வெற்றியோ? தோல்வியோ?
தடைகளை தகர்த்திடு.
வீணர்களிடம் வீண் விவாதம் எதற்கு?

வாழ்க்கை பிரச்சினைகள் நிறைந்த
போர்க்களம்.
சின்ன சிலந்தி வலையிலா
வீழ்ந்தாய்!

சாதிப்பதற்கு சாதனைகள்
குவிந்து கிடக்க.
சாதிச் சண்டைகளில் குருதி
சிந்துகிறாயா.
கனவுகளுக்கு விடைகொடுத்தே
கவினுறு வழிதேடேன்.

விழித்தெழு!
வீறு கொண்டே போராடு.

வெற்றிக் கொடி கட்டு
வேட்கையோடே.
வந்து விட்டோம்
வாழ்ந்தே காட்டுவோம்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# உறங்காத தெரு



குதிரை வேகத்தில்
கடந்த பாதைகளிலும்
ஆமை வேகத்தில் நடக்கையில்
அதிசயம் நூறு.

காண்பவற்றில் எல்லாம்
தாவும் மனதிற்கு
கட்டுப் போட்டுக் கொண்டு
உலகைப் பார்க்கிறேன்.

எங்கெல்லாமோ வாசித்த
கவிதையின் பக்கங்கள் எல்லாம்
அங்கே உயிரூட்டப்பட்டிருந்தன.

அந்தப் பானிப்பூரி வியாபாரிதானே
என்று வியக்கும் அளவு மலர்ந்த முகத்துடன்
மழலைகளுக்கு ஊட்டி விடுகிறார் ஒருவர்.

தந்தைக்காக எழுதும் கவிதைகளில்
தந்தையின் சாயலில் ஒருவரே
தந்தையின் ரணங்களை அதிகமாய்
சுமப்பது வழமை
அங்கேயும் அதே தான்.

மோதிக் கொள்ளும் நிழல்கள்
புன்னகைகும், சுமைகளுக்கும் இடையில்
திணறுகின்றன.

மாலை கூடி பறவைகள் ஓய்ந்த பின்னும்
பகலாய் எண்ணி
பொதி சுமக்கிறது ஒரு மனிதம்.

மூடிய கடை வாசல்களில்
சம்பளமில்லா காவலனாய்
உறங்குகிறது கடின உழைப்பு.

இந்த பாதையைக் கடக்க
அடம்பிடித்த மனம்
அங்கேயே உறங்கி விட்டது போல
நல்லிரவு தாண்டியும்
உறக்கம் தொலைத்தன
என் விழிகள் அன்று.

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

ஈர்ப்பும் இல்லை எதிர்பார்ப்பும் இல்லை
கனவுகள் ஆயிரம் இருந்தும்
வழி நடத்த யாரும் இல்லை
கடமைக்கு கல்லூரி
கற்றுவாங்க வகுப்பறை
சோர்வில் தேற்றிவிட தோழி
துன்பத்தை காற்றில் விட தோழன்
ஆண்டுகள் ஓடினாலும்
அடுத்த நொடி பற்றி கவலை இல்லை
வேலைக்கு சென்றாலும்
வியர்வை இன்றி உழைத்தாலும்
கல்லூரி மரத்தடி
நிழல் தரும் சுகம்
வேறெங்கும் கிடைக்காது



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# அவள்

அவள் படுக்கையில் நசுக்கப்படும்
உணர்வுகளின் உச்சத்தில்
ஊமையாய் நின்றவள்

அவள் பலரின் காமப் பார்வையில்
உருவம் தொலைத்த
உடலாய் ஆனவள்

அவள் மானம் காக்க
மாராப்பு அணிந்தாலும்
கண்களால் கசக்கப்படுபவள்



அவள் உடையில் அசிங்கம்
என்ற சமூகத்தின் முன்னே
நிர்வாணமாய் நின்றவள்

அவள் உடல் தின்னும்
சமூக வலைத்தளங்களால்
உணர்ச்சியற்று போனவள்

அவள் தெய்வமே ஆனாலும்
சிலருக்கு காமத்தின்
அடையாளங்கள் ஆனவள்

அவள் உடல் மேயும்
மிருகங்களின் முன்னே
ஊனமாய் தினந்தோறும் நிற்பவள்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கலையாத மௌனங்கள்

ஓர் அதிகாலை நேரம்!
புள்ளிகள் ஒன்று கூட்டி
புதுக் கோலம் வாசலில் தீட்டிக்கொண்டே
எதிர் வீட்டு முற்றத்தில்
குட்டி போட்ட பூனையாய்
அங்குமிங்கும் நடை பயின்ற என்னை
வேல்விழியால் சாய்ந்திருந்தாள்.

குளித்த தலையின் ஈரம் சொட்டியதில்
பூமிக்கு வேர்த்து விட்டதாய்
இடம் நகர்ந்து அவள் இடது கையால்
குழல் நகர்த்திய போது
மேகம் விலகி பூமிக்கு வந்த
நிலவாகத் தெரிந்தாள்.

மருதாணி இட்ட விரல்களில் பூமிக்கு மகரந்தம்
பூசிக்கொண்டு இருந்தாளோ என்னவோ
கோலத்துப் பூக்களின் வண்ணம் அனைத்தும்
வானவில்லைக் குடித்து மலர்ந்திருந்தன.



தினமும் மாறும் வானிலை போலே
அவளது கனவுகளுக்கு கற்பனை சிறகு தந்து
வாசலில் கோலமாய் உருவம் தீட்டியதெல்லாம்
என் இதயத்தோடு பேசிக்கொள்ளத் தான்
என்பதை எப்படி மறக்க முடியும்?

கருவாகி உருவாகி காற்றோடு கதை பேசி
நேற்று கூட முடிந்து போன கதையெல்லாம் பூ பூத்து
வீச்சருவாள் கம்போடு வேலிப்படல் கடந்து
இல்லாத கௌரவத்தை இருப்பதாகப் பேசிக்கொண்டு
வெட்டி சாய்த்த வாழை மரங்களின் சருகோடு
அவள் மீதான காதலும் முறிந்து போனதாய்
வீராப்பு பேசிய போதாவது
மௌனம் கலைந்திருக்கலாமென
குருத்துக்களில் துளிர்த்திருந்த வாழைக் கன்றாய்
என்னிதயம் இருந்ததை எப்படி மறந்தாய்?

காலங்கள் உருண்டோடி
இருளைத் துவைத்துக் கொண்டு
ஒளிர்ந்து கொண்டிருந்த
சித்திரை நிலவில் ஒரு நாள்
அரிதாய்ப் பார்த்த போது
கணவனோடு கடந்து சென்ற நீ
விழி மலர்த்தியது ஏன்?

சில மௌனங்கள்
கலையாமல் இருப்பதே
காற்றுக்கும் காதலுக்கும்
சாசுவாதமாக எழுதப்பட்டது போலும்.

உடைந்த மௌனங்கள்
கலையாமல் இருப்பதே நன்று!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

(அந்தாதிக் கவிதை)

பிரபஞ்சம் அனைத்திலும்
படைத்தவன் ஆட்சி
பிதாவாய் மாதாவாய்
பரமனவன் மூச்சி
நிரந்தர அன்பாய்
நல்மழை தந்தான்
நிர்மலன் அவனோ
நற்சூரியனாய் வந்தான்!

வந்தான் கதிரவன்
வரைந்தான் வான்மழை
வான்துளிகள் ஒவ்வொன்றும்
வையகத்தாய்க்கு நூலிழை
தந்தார் வள்ளுவரும்
தரணிக்கு வான்சிறப்பு
தேன்துளிகள் ஒவ்வொன்றும்
தனித்துவ #மண்சிறப்பு!

மண்சிறப்பு மேலோங்க
மழைச்சிறப்பு வேண்டும்
மன்னுயிர்க்கோ இரத்தவோட்டம்
மாமழையே என்றும்
கண்களிலும் நீர்சுரக்கும்
கருமுகில் தாயாலே
குவலயம் மிகச்சிரிக்கும்
கனமழை தந்தையாலே!

தந்தைசொல் மிக்கமந்திரம்
தரணியில் இல்லை
தாய்சொல் மிஞ்சும்
தண்ணீரும் இங்கில்லை
வான்மழையை வெல்லும்
வளமொன்றும் இல்லை
ஏன்இது ஒழுங்காக
இன்றுபெய்வது இல்லை?



இல்லை வானென்றால்
இருக்குமா இயற்கை!
இல்லை மழையென்றால்
இயங்குமா செயற்கை!
எல்லாமே சிறக்க
இவ்வளமீந்தான் ஆண்டவன்
என்றுமே மழைதரும்
இவ்வானமும் இறைவன்!

இறைவனின் வான்மழை
எப்போதுமே போற்றுவோம்
இப்போது மிஞ்சும்
இவ்வெப்பம் மாற்றுவோம்
முறையாகக் காட்டுவளம்
மேதினியில் காப்போம்
மழைமேலும் இழந்தாலோ
மிஞ்சுமெதுவோ #இப்பிரபஞ்சம்?

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (வெல்லபதியான்) ஈழ(ம்) வளநாடு

# அஞ்சல் பெட்டி




ஊரின் நீளத்தை உள்ளத்தில் அளந்து
உணர்வின் வீரியத்தை தன்னுள்ளே கடத்தி
எல்லோரின் நம்பிக்கையை இதயத்தில் வைத்து
நேரில் நின்றதென நிலைத்துவைத்தாய்.
நலம் நலமறிய ஆவலை
நாளும் பொழுதும் எழுத்தின் வழியே
எமக்குள் இருத்திவைத்து
மனதின் அழுத்தத்தை வரிகளுக்குள் குறைத்திட்டே
வாழ்வின் பாதையில் வசந்தங்களை விதைத்திட்டாய்
தபால் எனும் குரலுக்குள்ளே
வீடுகளை கண்டுகொண்டு
குடும்பத்தில் ஒன்றெென
கலந்திட்ட பெட்டியினில்
இருந்தவை எல்லாம் இதயத்தின் ரேகைகளே.
பெற்றோரைப் பிரிந்திட்ட
நாளின் முதன்முறையில்
என்னை இல்லம் சேர்த்து
இளைப்பாற்றிய கடவுளும் நீயே.
வேலையின் அழைப்பு மணி
வீட்டினில் நுழைந்திடவும்
மேடையாய் நின்றதுவும் நீதான்.
உயிருக்குள் இன்னொரு உயிரென
முளைத்திட்ட காதலுக்கு
முகவரியாய் தனை மாற்றி
ரகசியத்தைக் காத்ததுவும் நீதான்.
வேலையின் அழுத்தத்தில்
இல்லாளைப் பிரிந்தே
வேறிடத்தில் நிலைகொள்ள
அழுது தீர்த்த மனநிலையை
அவளிடம் கடத்தியதும் நீதான்.

மனிதனின் வாழ்வெங்கும்
மறு உயிராய் நடந்துவந்த
அஞ்சல் பெட்டிக்கு
மூடுவிழா.
கடிதத்தைச் சுமக்கின்ற கனம்
குறைந்தாலும்
காலத்தின் நீட்சியிலே காணாது போனாலும்
மரணத்தைத் தழுவுகின்ற
நொடி வரையும்
நினைவாகி உள்ளம் நிறைத்து
நெஞ்சுக்குள் கலந்துவிட்ட
அஞ்சல் பெட்டிக்கு
ஆலயம் எழுந்திடும் அவரவர் இதயத்தில்.

கவிஞர் இளையவன் சிவா

பயணித்திடும் பாதையிலே
கடந்திடும் மனிதர்களின்
வகைகள்தான் எத்தனை எத்தனை.
ஒவ்வொருவரும் தந்திடும்
அனுபவங்களிலும்
எத்தனை எத்தனை வகைகள்.



சிலர் மனதிற்கு நெருக்கமாய்
சிலர் மனதிற்கு தூரமாய்
சிலர் மனிதிற்கு காயமாய்
சிலர் மனதிற்கு மருந்தாய்
சிலர் மனதிற்கு துவர்ப்பாய்
சிலர் மனதிற்கு இனிப்பாய்.

உணவுகளிலோ அறுசுவைதான்
ஆனால் மனித குணங்களின் வகைகளோ
எத்தனை எத்தனை
கணக்கிட்டுப் பார்க்கிறேன்
எண்ணிக்கையோ முடிவிலியாய்.

கவிஞர் அறூபா அஹ்லா, கல்முனை(இலங்கை)

அதிகாரம் : 120

மணாளனால் மங்கைக்கு
காதல்வாழ்வு உண்டெனிலஃது.
மகளிரின் இன்பத்தில்
விதையில்லா கனிபோன்றதாமே.

காதலியின்பால் காதலன்
காட்டும் காதலானது.
வான்மழைநம்பும் உழவர்க்கு
கருமேகம்பெய்து உதவுதலுக்கொப்பாம்.

காதலனின் காதல்பெற்றவளுக்கு
அவன்பிரிந்திடினும் வருவான்.
இன்புற்று வாழ்வோமெனும்
பெருமிதம் தருமாமே.

காதலனால் காதலிக்கப்படா
கன்னியவள் தம்வாழ்வில்.
நல்வினைகள் செய்யாத
பெண்ணாய் போனவளாமே.

காதலன் காதலியிடத்து
காதல் கொள்ளாவிடத்து.
காதலிக்கு காதலனால்
இன்பமேதும் இல்லையாமே.

காவடித்தண்டின் இருபுறத்து
சமன்போல் இருவரிடத்தும்.
காதல் சமமாயிருத்தலே
இன்பம் தரவல்லதாமே.



கதலரிருவருக்கும் காமன்
சமமாய் அருளல்நலமே.
இல்லையேல் அருள்கிட்டாதொருவர்
காமநோயால் துன்பங்கொள்வரே.

தலைவனின் இன்சொல்லெதையும்
அனுபவியாது தனித்துவாழும்.
தலைமகள்போல் தைரியசாலி
உலகில் எவளுமில்லையாமே.

எனதருமை காதலன்
அன்பில்லா தானாகினும்.
அவனின் நற்குணங்களறிதலே
என்செவிக்கு இன்பந்தருமே.

என்நெஞ்சே உன்னிடத்து
அன்பில்லா காதலனிடத்தில்.
உன்நோய்பற்றி சொல்வதிலும்
கடலைத்தூர்த்தல் எளிதாமே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

நெஞ்சம் என்னும் கூட்டுக்குள்ளே.
உறுதியான உள்ளமும்
உண்மை நேர்மை குணமும்
நிலைக்க பெற்ற மனிதனே
சாதனை என்னும் மகுடத்தை
வென்றெடுப்பான் உண்மையே.



நெஞ்சுக்கு நீதியாய்
நேர்மை என்னும் பாதையில்.
பயணிக்கும் குணமே
மனிதனை புனிதனாய்
மாற்றும் என்பது உண்மையே.

நெஞ்சுக்கு நிம்மதியை
தந்திடும் செயலெல்லாம்
ஏழையின் கண்ணீரை
களைந்திடும் தருணமே.

நெஞ்சத்திலே உறுதியும்.
உழைப்பிலே உண்மையும்.
குணத்திலே கருணையும்.
மூச்சாய் வாழும் மனிதனே.
சமூகத்தில் புனிதனே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வெற்றி



கனவை நனவாக்கி
உழைப்பை உரமாக்கி

பாதகத்தை சாதகமாக்கி
அன்புதனை அழகாக்கி

முயற்சியை மூலதனமாக்கி
சோதனையை சாதனையாக்கி

பயிற்சியுடன் முயற்சியையும்
ஒன்றாய் சேர்த்திங்கு

தினமும் செயல்படுத்தும்
ஒவ்வொரு நாளும் வெற்றி தானே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

தொன்மையான என் மொழி
தேனாய் பாலாய் தித்திக்கும் வார்த்தைகள்
வந்தோரும் மகிழ்ந்து  கற்றறிந்த வாக்கியம்
உயிரும் உடலும் உந்தன் ஆவி
உலக வழக்கில் இல்லாத இலக்கியம்
தமிழில் மட்டும் தரணி கண்டது
குழந்தையில் பிறந்தது அம்மா வார்த்தை
இமயம் தொட்டது எங்கள் இலக்கியம்
அம்மாவும் அப்பாவும் உயிரெழுத்து உயிர்தானே
கண்ணி நெத்தியில் குங்குமம் போல
மெய்யெழுத்தும் அதுவாய் மேன்மை கண்டது
வட்டமிட்ட கூந்தல் வடிவான சிரமாய்
உயிர்மெய் எழுத்தும் ஒன்றான அழகு
கண்டங்கள் தாண்டி காலினை பதித்து
உலக மொழியின் உயிரும் நீயே
அறிஞனும் புலவனும் அசந்து போகும்
ஆழ்கடல் தோற்கும் தாய்மொழி தொன்மை




கவிஞர் செம்பை. கிட்டு கிருஷ்ணன், புதுக்கோட்டை

# மதில் மேல் பூனை

முதலெது, முடிவெது அறியா
முற்றிலும் சிக்கலென வாழ்க்கை
ஆறாத ரணங்கள் மனதினுள்
அழிக்க முடியாத சில வடுக்கள்.

கரையை தொடும் அலைகளில்
கால் பதித்து அமைதியை தேடுது
ஆறுதலாக ஓர் பொக்கிஷம்
நினைவுகளை நிஜமாக்க மீண்டும்.



காலத்தின் மாற்றம் கைகூடுமா?
தன் நிலை அறிந்தும்
கணக்கிட முடியாத தருணத்தில்
விருப்பமும் இல்லை
வெறுப்பும் இல்லை.

குழம்பிய குட்டையில்
மீன் பிடிப்பது எளிது
குழம்பிய மனதில்
முடிவு எடுப்பது பெரிது
தெளிவும் அறியாது
விடையும் தெரியாது.

எந்த பக்கம் குதிக்கும்
இந்த மதில் மேல் பூனை.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

வலிமை மிகுந்த
பாதச்சுவடுகள் மட்டுமே
நீண்ட பாதைகளுக்கு
நிலவொளியாகின்றன

பின் வாங்கா
முதலடிகள் மட்டுமே
இலக்குகளின்
முடிவுகளுக்கு
முகவுரையாகின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# உலகின் உஷ்ணம்!

வெயிலின் உஷ்ணம்
கூரையில்லா வயல்வெளி
உடலெங்கும் வியர்வைத்துளிகள்
மேகமெனும் கூரை சிலநேரம்
தென்றல் சிலநொடி குளிர்விக்க
மனதோடு வானொலியின் இசை
பணி தொடருமே கதிரவன்
கண்ணயரும் வரை!



தண்ணிச்சோறும் துவையலும்
வடகமும் வத்தலும்
பசியாற்றி கண்ணொளி தருமே
சிறிது கண்ணயர்ந்து பணி தொடர
உடல் வலிமை தருமே!

உணவு சங்கிலி தொடர்கிறது
உணவுக்காய் பாடுபடலும்
பாடுபட்டதை சேர்ப்பதும்
சேர்த்ததை பாதுகாப்பதும்
காத்ததை விளைவிப்பதுமாய்
உலகம் சுழல்கிறது!

மகிழ்வான உறவுகளும்
அரவணைக்கும் பெற்றோரும்
குறைவற்ற செல்வமும்
பற்றுள்ள தலைமுறையும்
உடலுழைப்புக்கு வயல்வெளியும்
ஒருங்கே அமையப்பேற்றால்
பாக்கியமே மனித வாழ்வியலில்!

வயல்வெளி காடாக
மனிதம் மிருகமாக
சமுதாயம் பாழாக
உலகம் வீழ்கிறது உயிரற்று உஷ்ணமாக!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# விழி கொடுப்போம்! ஒளி கொடுப்போம்!



ஐம்புலனில் ஒன்றாக
அமைந்திடுமே விழியிரண்டும்!

மேம்பட்ட சிறப்பு
மேனியிலே கண்களுக்கே!

கல்வியைக் கண்ணென்பர்!
கணவனைக் கண்ணென்பர்!

இல்லாளை இன்மொழியால்
கண்ணே என்றழைப்பர்!

இவ்வுலகைக் காண்பதற்கு
இருவிழிகள் துணையாகும்!

கண்ணப்பர் காலத்தே
கண்தானக் கதையுண்டு!

வாழ்கின்ற காலத்தே
வழங்கிடுவோம் விழிக்கொடையை!

மருத்துவ உலகத்தின்
மகத்தான சாதனையால்

பிறவியில் விழியிழந்தோர்,
பின்னாளில் விபத்தாலே

பார்வையினை இழந்தோரும்
பெறுகின்றார் பார்வையினை!

இருந்த காலத்தில்
நாம்கண்ட உலகத்தை

மறைந்த பின்னரும்
பிறர்காண்பர் நம்விழியால்!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# கடந்து செல்வோம் காலத்தை

உயிர் பெற்று உருவம் அறிந்து
உலகம் அறியும் பொழுதுதான் தெரிகிறது
இவ்வுயிர் உருவம் இல்லாமல்
இருந்திருக்கலாம் என்று
மானிடப் பிறவியின் மகிமையும்
மற்ற உயிர் பிறப்பின் அகராதியும்
அறமின்றி கடக்கிறது

மனித பிறப்பு அனைத்தும் தனக்குள்
கை கொண்டு காலவென்றது போல்
ஒரு கணக்கு ஆனால்
காலம் அனைத்திற்கும் ஒருபதில்தான் என்றும்
அனைத்தும் எனக்கானதே



இதை அறிந்த மானிடப்பிறவி
பித்தனும் சித்தனும்
அறியா மானிடப்பிறவி
இன்று விஞ்ஞான புறவி
எங்கும் எதிலும் போட்டிகள் என்று
ஏற்றத்தாழ்வின் நிலைகளுடன்
நிம்மதி இல்லா வாழ்க்கையில்
மற்ற உயிர்வலி மறந்த மானிடப்பிறவி

பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்
புவிக்கு உணவாகும் ஆன்மாக்கள்
உலகெங்கும் அறிவு என்ற
ஆசானங்கள் இதில் இறைவு
என்னும் கோட்பாடு பல்வேறு நாடுகளின்
நிலைபாடு கடைக்கோடி கண்ணீர்
அறியாத விஞ்ஞானி
நிலவோடு விளையாடுகிறான்

நேரம் காலம் என்று வகுத்த
வழிபாடுகளில் தானும் கடவுள் என்று
அழிவை தரும் கண்டுபிடிப்புகளே
இங்கு கடவுள்!

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# அருமருந்து

ஏதோ ஒரு வகையில்
நாம் சந்தித்த சிலரின்
நினைவுகள்
இந்த வாழ்க்கையை
சுவராசியமாகவும்
மகிழ்ச்சியாகவும்
மடை மாற்றி விடுகிறது
இப்படித்தான்
நம்மையறியாமல்
நகர்ந்து செல்கிறது வாழ்க்கை
மனிதர்கள் மட்டுமல்ல
வீட்டுத்தோட்டத்தில்
பூத்துக்குலுங்கிய
பூக்களாகவுமிருக்கலாம்
எப்போதோ
துள்ளிக்குதித்து
குழைந்து விளையாடிய
நாய் குட்டியாககூட இருக்கலாம்
பரந்து விரிந்த மண்ணில்
நிறைவாய் வாழ
எத்தனையோ வழிகள்
அத்தனையும் அருமருந்தே!



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# அங்கேயாவது

என்னிடம்
இந்த குறை உள்ளது
இது தெரியவில்லை
இதை மேம்படுத்திக்
கொள்ள வேண்டியது
அந்த குணத்தை
மாற்றிக் கொள்ள
வேண்டியுள்ளது



அந்த விஷயத்தை
ஆழமாய் யோசிக்க
வேண்டியுள்ளது
அது ஒப்பிடும்
குணத்தை
ஒதுக்க வேண்டியுள்ளது

என்று
அங்கேயாவது
முழு உண்மை
பேசுவோம்
மனசாட்சி நடத்தும்
உள்மன விசாரணையில்
அங்குதான்
இவையெல்லாம்
சொன்னால்
மதிப்பு குறையும்
ஏளனம் செய்வார்கள்
நான் பெரியவன்
என்றெல்லாம்
காட்டிக்கொள்ள
வேறு யாருமில்லையே.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

உயர்ந்த ஜாதி
உயிரினங்கள்
விலங்குகள்
***

கடைசிவரை
கை கடிகாரத்தை என்னிடம் தரவே இல்லை
தந்தை கொண்டு போய்விட்டார்
சொர்க்கத்திற்கு மணி பார்க்க
***

நான் பார்த்ததிலேயே
அமைதியான முகங்கள்
இறந்தவர்களின் முகங்களே
***

ஒரு சில வார்த்தைகளின் அர்த்தங்களை
விளக்கிக் கூற முடியாது
உதாரணம் அம்மா
****

இன்றைய அவசர உலகத்தில்
பாரதியார் இருந்திருந்தால்
நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே என்றில்லாமல்
அனைத்தையும் பறப்பதுவே என்று எழுதி இருப்பார்
***.



தந்தை மிதிவண்டிக்கு
முன் ஒரு கூடை இருக்கும்
அதில் அமர்ந்தால்
உலகமே அழகாய் தெரியும்
***

நான் சவுகரியமாக உள்ளதில் என்ன தவறு?
நான் கஷ்டப்படக்கூடாது என்று தான்
தந்தை உழைத்து உழைத்து தேய்ந்து போனார்.
***

தன்னை நம்பி வந்த பெண்ணுக்கு
வீட்டில் கழிப்பறை அமைத்து தர
இயலாதவனெல்லாம்
எதற்கு திருமணம் செய்கிறான்
***

சமுதாய கேடுகள்
அனாதை இல்லம்
முதியோர் இல்லம்.
***

குறையில்லா மனிதன்
இன்னும்
குரங்காக இருக்கிறான்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

சூரியனின் வெளிச்சத்தின் தங்க நிறம் பூமி எங்கும் பூசப் பட்டுக்கொண்டிருந்தது. பறவைகள் தங்கள் தங்கள் வேலைக்குப் போவதற்கு "கிச்..கிச்..." குரல் எழுப்பி தயாராகிக் கொண்டிருந்தன. இரவு மகள் பூமித்தாயிடம் விடைப்பெற்றுக் கொண்டிருந்தாள்.




அலைபேசியை எடுத்துப்பார்த்த திலக் "என்ன அரசு இவ்வளவு காலையிலே போன். எதாவது அவசரமா?" என்றான். "ஆம் தீபக். என்னை அப்பாவின் ஆட்கள் சூழ்ந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் ஒரு வருடத்திற்காவது நான் ஒளிந்தாக வேண்டும்."

"ஒன்று புரியாமல்தான் கேட்கிறேன் அரசு. எதற்காக இந்த ஒளிவு மறைவு. நீயும் உன் உலகம் கட்ட ஆரம்பித்து விட்டாய். வீட்டோடு போய்விடுவது நல்லது தானே." என அவன் பேசி முடிப்பதற்குள் இன்னும் ஓராண்டாவது ஓரளவு சம்பாத்தியம் செய்து இன்னும் சில வியாபாரங்களை நிலைப்படுத்தி விட்டு அம்மா அப்பாவிடம் திரும்பலாம் என்றிருக்கிறேன்." என்றான். "சரி. இப்போ எதற்காக அழைத்தாய்? இங்கே இன்று என் அலுவலகத்திற்கு என் அம்மா வரக்கூடும் என்று அனுமானிக்கிறேன். அதனாலே சிங்கப்பூருக்கு ஒரு டிக்கெட்டும் ஒரு பயணிகள் விசாவும் எடுத்துவிடு. நான் நேராக ஏர்ப்போர்ட் வருகிறேன்."

"சிங்கப்பூரில் எங்கே தங்கப் போகிறாய்?" , "சொல்லப் போனால் இது ஒரு வியாபாரப் பயணம்தான். உன்னிடம் ஏற்கெனவே சொல்லியிருந்த படி நான் குஜராத்தில் ஒரு எண்ணெய் கம்பெனியில் ஒப்பந்தம் செய்திருந்ததை விரிவாக்க சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தோம்."
"ஏய் அரசு எங்கே போகிறாய் என்றுதான் புரியவில்லை. இந்த எண்ணெய்க் கிணறு விவகாரத்தில் எல்லாம் எப்போது நுழைந்தாய். விட்டால் நிலாவில் போய் ரியல் எஸ்டேட் வியாபாரம் நடத்தப்போய் விடுவாய் போலிருக்கிறதே."

"முடிந்தால் அதையும் ஒருகை பார்த்து விட வேண்டியதுதான். சரியாகச் சொன்னால் அடுத்த வாரம் தான் சிங்கப்பூர் பயணமே முடிவு செய்திருந்தேன். இப்போது அம்மாவின் தொந்தரவு.... வீட்டிற்குப் போய் விடலாம்தான். அப்பா இது உங்கள் இரத்தம். என்னாலும் இந்த அளவிற்கு கொடி கட்ட முடியும் என்று அவருக்கு முன்னால் போய் நிற்க வேண்டும். ஏய்.. என்னப்பா. பேச்சை காணோம்."

கவிஞர் இரஜகை நிலவன்

"உண்மையிலேயே நீ ஒரு அதி வேக பிஸினஸ் மேகந்தான். மறுக்க வில்லை. எங்கேயாவது சறுக்கி விடுவாயோ? என உன் வேகம் தான் பயம் காட்டுகிறது.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அம்மா அப்பாவிடம் திரும்பி விட்டால் இந்த வேகம் கண்டிப்பாக வடிந்து விடும்."
அதுவும் சரிதான். நான் விமானப் பயணச் சீட்டும் விசாவும் கிடைத்தவுடன் அழைக்கிறேன்." என்றான் தீபக்.

"சரி." என்று போனை வைத்து விட்டு சன்னல் வழியாக எட்டிப்பார்த்தான் அரசு. ரோட்டில் பைக்கை நிறுத்தி அதில் சாய்ந்து நின்று சிகரெட் குடித்துக் கொண்டிருந்தார் அப்பாவின் நண்பர் பாபு.

சட்டையை வேகமாக எடுத்து மாட்டிக்கொண்டு பின்னால் வெளியே வந்து, ஒரு டாக்சியில் ஏறிக் கொண்டு "காந்தவிலி போப்பா" என்றான்.

திரும்பவும் அலை பேசியில் அழைப்பு வர "யாரு?" என்றான் அரசு. "சார் நாங்கள் 'தின விடியல்' தினசரி பத்திரிகையிலிருந்து பேசுகிறேன்."

"சரி. சொல்லுங்க. விளம்பர சம்பந்தமா நீங்கள் பேச வேண்டுமெனில் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்" என்று அவசரமாகச் சொன்னபோது "சார் நாங்கள் அதற்காக கூப்பிட வில்லை. எல்லா ஆண்டும் 'ஒரு தமிழ் இளம் வியாபாரக் காந்தம்' என்று ஒரு தமிழ் வியாபாரியை(பிஸினஸ் மேனை)த் தேர்ந்து அவருக்கு விருது கொடுப்பது வழக்கம்" என முடிக்கு முன் ...
"இந்த ஆண்டு... நான் கொஞ்சம் அவரசமாய் போய்க்கொண்டிருப்பதால் அடுத்த அண்டு பார்த்துக் கொள்ளலாமே. நீங்கள் வேறு யாரையாவது முயற்சி செய்யுங்களேன்..." என்றான்.

"சார், இந்த வருடம் உங்களைத் தேர்வு செய்து விட்டோம். நீங்கள் சம்மதம் சொல்லி விட்டால்...."

"சரி. எங்கே? எப்போது? என்ன நிகழ்வு?" , ''சார் வருகிற இருப்பத்தொன்றாம் தேதி ஞாயிறு மாலை.... '' என்றது எதிர்முனை.

''ஒரு நிமிடம்'' என்று சொல்லி விட்டு கையில் கட்டியிருந்த கடிகாரத்தில் அன்று வேறு ஏதாவது பணி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து விட்டு ''சரி சொல்லுங்கள்'' என்றான்.

"மகா கவி காளிதாஸ் அரங்கத்தில் ஒரு மணிக்கு நிகழ்ச்சி தொடங்குகிறோம். மஹாராஷ்ட்ரா மாநில முதல்வர் வந்து இந்த நிகழ்வில் கலந்து கொள்கிறார்."

"சரி, எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? " என்றார்.
"எந்த விளம்பரம் போட்டாலும் என் பெயர் போடாமல் கொஞ்சம் சஸ்பென்ஸாக இருந்தால் நலமாக இருக்கும்."

" உங்கள் விளம்பரத்திற்கான எல்லா செலவையும் நானே ஏற்றுக் கொல்கிறேன்." என்றான் அரசு.

"ஒவ்வொருதரும் தன் பெயர் போட்டு விளம்பரம் தேடிக்கொள்ளும் இந்நாளில் பெயர் போட வேண்டாம் என்கிறீர்கள். ஆச்சரியமாக இருக்கிறது. திரும்பவும் தொடர்பு கொள்கிறோம்." என்றது எதிர்முனை.

"சரி, முடிவு பண்ணி விட்டு அழையுங்கள்" என்று அலை பேசியை மூடி விட்டு 'என்ன செய்யலாம். அப்பா ஏன் என்னை இவ்வாறு துரத்துகிறார்?" என்று அரசு யோசித்துக் கொண்டிருந்த போது "சார் எங்கே இறங்க வேண்டும். காந்திவிலி வந்தாச்சு"" என்றான் ஓட்டுநர்.

"அந்த புனித பாத்திமா ஆலயத்திற்கு பக்கத்தில் இறங்கிக் கொள்கிறேன்" என்றான் பையிலிருந்து பணம் எடுத்தவாறு.




தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

துயரத்தின் தடம் - மனநோய் முதல் மறுக்கல் வரை

ஒவ்வொரு மனிதனுள்ளும் மனநோய் என்ற ஒரு நிழல் படர்ந்து கொண்டே இருக்கும். மனிதன் மனிதனால் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை அடைந்திருப்பான். அந்தத் தாக்கமே அவன் மனதிலும் புண்ணாகப் படிந்து விடும்.

அதை வெளிப்படுத்தாமல் உள்ளுக்குள் அடக்கிக் கொண்டால், அந்த வலி தெளியாத குழப்பமாக மாறி, சிறுகச் சிறுக அவனது உணர்வுகளை களவாடி, இறுதியில் அவனை முழுமையாக கைதாக்கி விடும். ஆனால் அவன் அதை உணர முடியாத நிலையிலேயே இருக்கும்.



மெல்ல அவன் சிரிக்கும் தருணமும், கோபப்படும் தருணமும், சிடுசிடுப்பாகிப் பேசும் தருணமும் - அனைத்தும் மற்றவர்களுக்கு புரியாத விதமாக மாறி விடும். அப்போது யாரும் அவனிடம் "உனக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படி மாறிவிட்டாய்?" என்று கேட்கத் துணியமாட்டார்கள். கேட்டாலும், அவன் குரோதக் குரலில் "என்னக்கு ஒன்றும் ஆகவில்லை; நான் நன்றாகவே இருக்கிறேன்" என்று பதிலளிப்பான். இதன் விளைவாக, மக்கள் அவனிடமிருந்து விலகத் தொடங்குவார்கள்.

மறுக்கல் உ + ம்

ஒரு இளைஞன் தனது மனக்கஷ்டத்தை நெருங்கிய நண்பனிடம் பகிர்ந்து கொண்டான். ஆனால் அந்த நண்பன்,! அதை கேட்டு சிரித்துவிட்டு, "அதற்காகத்தான் இவ்வளவு துயரப்படுகிறாயா?" என்று அவமதித்தான். அந்த ஒரு மறுக்கல் — அவனது மனதில் பூட்டாகி விட்டது. அதன்பிறகு யாரிடமும் தனது வலியைப் பகிர வேண்டாம் என்று அவன் முடிவு செய்தான். இதுவே மனநோயின் முதல் படி; பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பே மூடப்பட்டது.

கவிஞர் சஃஹனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

**இழப்பு உ+ ம்**

ஒரு தாய் தனது மகனை ஒரு விபத்தில் இழந்தாள். அந்த துயரத்தைத் தாங்க முடியாமல், மகனின் புகைப்படத்தோடு தினமும் பேசிக்கொண்டிருந்தாள். "அவன் இன்னும் என்னுடன் இருக்கிறான்" என்ற மாயையில் வாழ்ந்தாள். வலியை வெளியில் சொல்லாமல், உள்ளுக்குள் அடக்கிக் கொண்டதால், அவள் உணர்ச்சிகள் மங்கின. இப்படிப்பட்ட சூழலில் உடனடியாக மனநல மருத்துவ உதவி கிடைக்கவில்லை என்றால், அந்த வலி வாழ்க்கையையே முடக்கிவிடும்.

**தோல்வி உ + ம்**


ஒரு மாணவி மருத்துவராக வேண்டும் என்று கனவு கண்டிருந்தாள். ஆனால் தேர்வில் தோல்வியுற்றபோது, அனைவரிடமும் சிரித்துக் கொண்டிருந்தாலும், உள்ளுக்குள் தன்னை குற்றம் சாட்டிக் கொண்டாள். "நான் ஒன்றுமே செய்ய முடியாதவள்" என்ற எண்ணம் தினந்தோறும் அவளை வாட்டியது. தோல்வி பற்றி யாராவது கேட்டால், "எனக்கு ஒன்றும் இல்லை" என்று தட்டிக் கழித்துவிட்டாள். அந்த அடக்கப்பட்ட வலியே பின்னர் மன அழுத்தமாக மாறியது. மருத்துவரின் உதவியால் தான் அவள் மீண்டும் நிலைபெற்றாள்.

இவ்வாறு, மறுக்கல், இழப்பு, தோல்வி — மூன்றுமே மனிதனை மனநோயின் பாதையில் தள்ளுகின்றன. பாசமும் நம்பிக்கையும் சிதைந்தால், பெரும்பாலானவர்கள் தம் வசம் விட்டு பின்னடைவில் வீழ்ந்து விடுகிறார்கள். அவர்களைத் திரும்பவும் எழுப்புவதற்கு மனம் திறந்து பேச வைக்க வேண்டும். ஆக கூடினால் அவசரமான மனநல மருத்துவ உதவி தேவைப்படுகிறது.

அழுது வெளிப்படுத்துபவர்கள் பாதியளவு காப்பாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் அழாமல் உள்ளுக்குள் அடக்கிக்கொள்வோர் தான் மிக ஆபத்தான நிலையில் இருப்பார்கள். அவர்களுக்கு உடனடி சிகிச்சையும், கருணையுடன் கூடிய பரிவும் தேவைப்படுகிறது. எம்மிடம் தென்படும் மாற்றத்தை அறிந்து நம்மிடம் நெருக்கம் கொடுத்து நானிருக்கிறேன் என சொல்ல வாய்க்கும் நபர்களை தக்க வைப்பதும். நம்மிடம் இருப்போரிடம் காணும் மாற்றத்தை இனம் கண்டு அவர்களுக்கு நாமிருப்பதை உணர்த்தி தம் வலிகளை வெளிப்படுத்த நம்பிக்கையை விதைப்போம்..

கவிஞர் சஃஹ்னாஸ் பேகம், முதிலைப்போளி, புத்தளம் (இலங்கை)

உயிர்கள் போனால் பெறமுடியாது.
உணர்வுகளை தொலைத்தால் நிம்மதி இருக்காது..
நம்மை காத்து நம்மில் இருப்போரையும் காப்போம் ...



தேடலாகும்...

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதிலைப்பாளி, புத்தளம் (இலங்கை)



வாழ்க்கையில் ஒரு முறையேனும் தோல்வியைச் சுவைக்காத மனிதர்கள் என்று யாரும் இருக்க முடியாது. "என் வாழ்வில் என்றும் வெற்றிதான்" என்று பெருமையாக மற்றவர்கள் முன் பெயர் வாங்க மட்டுமே யாரும் கூறிக்கொள்ள முடியும் .ஆனால் தோல்வி இல்லாத வெற்றியை யாரும் அடைவது சாத்தியமற்றது. தோல்விகள் நம்மைத் தேடி வரும்போது, நாம் விலகிச் செல்லவோ, அதைத் தடுக்கவோ முடியாது. ஒரு கணம் நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் வாழ்வில் கிடைத்த வெற்றிகளால் என்ன கிடைத்தது? தோல்விகளால் என்ன கிடைத்தது?

வெற்றிகள் பலமுறை நமக்குக் கைதட்டல்களையும், பாராட்டுகளையும், பதக்கங்களையும் மட்டுமே பரிசளிக்கின்றன. ஆனால், தோல்விகள் அப்படியல்ல. அவை புத்தகங்களோ, பள்ளிகளோ கற்றுத் தராத மிக அரிதான அனுபவங்களைக் கற்றுத் தருகின்றன. ஒரு தோல்விதான் நம்மைப் பக்குவப்படுத்துகிறது; வாழ்க்கையின் யதார்த்தத்தைக் கண்முன் நிறுத்துகிறது.

ஒவ்வொருவரையும் வாழ்க்கை, இந்த வாழ்வு தேவை தானா ? வாழ்ந்து என்ன தான் சாதிக்கப் போகின்றேன் ? என்ற கேள்விகளோடு நிச்சயம் ஒரு சந்தர்ப்பத்தில் நிறுத்தும்.
அது பொருளாதார பிரச்சணையாக,காதல் தோல்வியாக, உறவுகளின் போலித் தன்மையாக, கல்வியின் பின்னடைவாக என எதாவதொன்றினூடாக வென்றாலும் இருக்கலாம்.
வாழ்க்கையெனும் இப்பயணம் புதிர்கள் நிறைந்த புத்தகம் போன்று தான் ஆனால் புதிர் ஒன்று இருந்தால் அதற்கான பதிலும் நிச்சயம் இருக்கும் சவால்களைக் கடந்து அதையறிவதே நம் வெற்றி.

தோல்வி என்பது நம் வாழ்வின் முடிவு அல்ல தோல்வி தான் நம் வாழ்வின் தொடக்கப்புள்ளி நாம் தோல்வி என நினைத்து வறுந்தி அதே புள்ளியில் நின்று கொண்டிருந்தால் நம் வாழ்வில் வெற்றி என்பதே இருக்காது. அப்புள்ளியிலிருந்து முன்னோக்கி செல்ல வேண்டும் இடி,மின்னல், மழை போன்று தோல்விகள் நம்மை

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

கட்டுரை

தாக்கினாலும் நாம் மனம் தளர கூடாது. நம் பலம் ,பலவீனத்தை நமக்கு உணர்த்துவது தோல்விதான். நம்மை ஒரு தைரியமான மனிதனாய் செதுக்குவதும் தோல்விதான். வெற்றியின் உச்சியில் நாம் இருக்கையில் நாம் மறந்து போகும் யாதார்த்தத்தை உணர்த்துவதும் தோல்விதான். அது நம்மை தாழ்மையாகவும்,பொறுப்பாகவும்
மாற்றுகிறது.

வெற்றியை நோக்கி நாம் செல்லும் பாதையில் தோல்விகளை சமாளிக்க நமக்கு பல பண்புகள் தேவை அதில் மூன்று குணங்கள் நிச்சயம் தேவை. முதலாவது விடாமுயற்சி. முதன் முதலில் நடக்கப்பழகும் குழந்தை எத்தனை முறை கீழே வீழ்ந்தாலும் விடாது மீண்டும் மீண்டும் எழுந்து நடக்கிறது. இருதியாக சாதரணமாக நடந்து வெற்றியும் அடைகிறது. "முயற்சி திருவினையாக்கும்" என்பது வெறும் வார்த்தையல்ல
ஒரு இலக்கை அடையும் வரை விடாது முயற்சியை தொடர்வதே விடா முயற்சி அது தான் நம் கனவுகளுக்கு உயிர் கொடுக்கிறது.

**இரண்டாவது பொறுமை:**

இது மிக அத்தியவசியமான ஒன்று நம் வாழ்க்கையில் எந்த சந்தர்ப்பத்திலும், எந்த முடிவெடுப்பதாயினும் பொறுமையை கையாள வேண்டும். விடாமுயற்சிக்கு பக்க பலமாயிருப்பதே பொறுமையாகும். நம் முயற்சிகள் தொடர்ந்து தோல்வியடைந்து கொண்டிருக்கையில் நாம் விரக்தியடைந்து முயற்சியை கைவிட்டு விடாது பொறுமையாய் முயற்சியை தொடர வேண்டும். இன்று நட்டப்பட்ட விதைகள் நாளைம ரமாகி விடுமா? அவை வளர காலங்களும் ,அதற்குரிய மூலப்பொருட்களும் தேவைப்படும் அல்லவா ? அதே போல் தான் நமக்கு நமக்கான அனுபவங்களும் தேவை வெற்றிக்கான தருணம் வரும் வரை பொறுமையாக காத்திருப்பது அவசியம்.

**மூன்றாவதாக சவால்கள் :**

நம்மை என்றும் பின் தொடர்பவை தான் சவால்கள். அவை கடினமானவை தான் ஆனால் அவற்றை வெல்வது சாத்தியமற்றது அல்ல. சவால்களை நாம் எதிர் கொள்கையில் அவை நம்மை வலிமை படுத்துகின்றன. நாம் அதற்கு அச்சப்பட தேவையில்லை அவை நம்மை செதுக்கி பல அனுபவங்களையும் ,அறிவையும் நமக்குள் பதுக்கி நம் திறமைகளை மேலும் கூர்மையாக்குகின்றது.

கவிஞர் ரீஸ்னிரா ரமீஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

# வெற்றிகளே தோல்விக்கான திறவுகோல்

கட்டுரை

ஹரிபோட்டர் எனும் நாவலை அறியாதவர்கள் மிகக்குறைவு அந்நாவல் மிகப் பிரபல்யமடைந்த நூலாகும். அந்நூலை முதன் முதலில் எழுதியவர் பிரிட்டிஷ் எழுத்தாளர் ஜேகே ரொளிங் என்பவர் தான். இவர் படிப்பை முடித்த பின் அவருக்கேற்ற வேலை கிடைக்கவில்லை இளம் வயதிலேயே தன் தாய் மரணமானதால் மிகுந்த துக்கமடைந்தார். அவரின் முதல் திருமணமும் விவாகரத்தில் முடிந்தது.

இரண்டாம் திருமணம் அவரின் தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்குமளவிற்கு ஒரு சிறு ஒளியாய் அமைந்தது. இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட பின் தான் ஹரிபோட்டர் என்ற நாவலை தன் கற்ப்பனையும, உணர்வுகளையும் முழுமையாக பயன் படுத்தி எழுத ஆரம்பித்தார். அவரின் முதல் நாவலான ஹரிபோட்டர் என்ற நாவலை வெளியிட பன்னிரண்டிற்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் மறுத்து விட்டன அப்போதும் ரௌலிங் மனம் தளராது தன் முயற்சியை கை விடாது தொடர்ந்தார். அதன் விளைவாக இறுதியாக ப்ளூம்ஸ்பரி என்ற சிறிய பதிப்பகம் அவரது நாவலை வெளியிட சம்மதித்தது.
உலகளவில் மிக பிரபல்யமடைந்த புத்தகமாக இன்று ஹரிபோட்டர் என்ற நாவல் திகழ்கிறது.

ஒரு சாதாரண பெண்ணாக இருந்தவர் உலகப் புகழ் பெற்ற கோடிஸ்வரராகவும், சிறந்த எழுத்தாளராகவும் உயர்வதற்கான காரணம் என்ன ? தன் தாயின் மரணம், முதல் திருமண விவாகரத்து,பதிப்பகங்களின் மறுப்பு இவைகளை அவர் ஒரு தோல்வியாக பார்க்கவில்லை ஒரு சவாலாக பார்த்தார் அவர் வெற்றிக்கு அவரின் விடா முயற்சியே காரணம்.

ஜேகே ரௌலிங்கின் வாழ்க்கை கதை தோல்வி என்பது ஒரு முடிவுக்காலகட்டம் அல்ல. அது வெற்றியை நோக்கிய பயணம் என்பதை நிரூபிக்கிறது. தனது தாயின் மரணம், தன் வாழ்க்கை பிரச்சணை, வேலையற்ற சூழ்நிலை பல கடுமையான தோல்விகளை சந்தித்த போதிலும் அவற்றால் அவர் வலி அனுபவித்தாலும், அவர் உடைந்து போகவில்லை. ஒவ்வொரு தோல்வியையும் ஒரு சவாலாக ஏற்று பொறுமையாக விடாமுயற்சியை கைவிடாது போராடி தன் வெற்றியை கைப்பற்றியது என்பதை நமக்கு தெளிவாக உணர்த்துகிறது.

எதாவதொன்றில் நீங்கள் தோல்வியுற்று கலங்கிப் போயிருக்கும் தருணம் மனதுடைந்து விடாமல் முதலில் உங்களை நீங்களே தேற்றிக் கொள்ள வேண்டும்.

கவிஞர் ரஸீனா ரமீஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

# வெற்றிகளே தோல்விக்கான திறவுகோல்

## கட்டுரை

தோல்வி ஒரு போதும் நம்மை தாழ்த்துபவையல்ல. அவைதான் நம் வெற்றியை நோக்கிச் செல்வதற்கான ஏணிப்படி. நாம் தோல்வியடைந்த நிலையில், முதலில் செய்ய வேண்டியது சுயபரிசோதனை. "நான் ஏன் தோல்வியடைந்தேன்?", "இந்த தோல்வி எதனால் வந்தது?", "என் தவறுகள் என்ன?", "அடுத்த முறை இத்தவறு வராமல் இருக்க நான் என்ன செய்ய வேண்டும்?" என்பவற்றை நிதானமாகச் சிந்திக்க வேண்டும். இந்தக் கேள்விகளுக்கு நாமே நமக்குள் கேட்டு பதிலளிக்கும்போது, நமது பலவீனங்களைக் கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்கான வழி கிடைக்கும். இந்தச் சுயபரிசோதனைதான், நம்மைப் பலப்படுத்தி, அடுத்த வெற்றிக்குத் தயார்படுத்துகிறது. தோல்வி தந்த பாடத்திலிருந்து கற்றுக்கொண்டு, புத்துணர்ச்சியுடன் மீண்டும் முயற்சிக்கும்போது, அதைவிடப் பெரிய வெற்றியை அடைவது நிச்சயம் சாத்தியமே.

வாழ்க்கை என்பது வெற்றி மற்றும் தோல்வி என இரு பக்கங்களைக் கொண்ட நாணயம் போன்றது. வெற்றிகள் நமக்குத் தற்காலிக மகிழ்ச்சியைத் தந்தாலும், தோல்விகள் தான் நம்மை வாழ்நாள் முழுவதும் தாங்கி நிற்கும் வலிமையான தூண்களாக இருக்கின்றன. ஒவ்வொரு தோல்வியும், நம்மைச் செதுக்கி, வாழ்க்கையின் யதார்த்தத்தையும், நமது பலம் மற்றும் பலவீனங்களையும் கற்றுத் தருகிறது.

ஒரு குழந்தை விழுந்து விழுந்து நடப்பது போல, நாமும் தோல்விகளைச் சந்தித்துத்தான் வெற்றியை நோக்கி முன்னேறுகிறோம். இந்தச் சவாலான பயணத்தில், முக்கியமாக விடாமுயற்சி, பொறுமை மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் மனப்பான்மை ஆகிய மூன்று குணங்கள் நம்மை வழிநடத்துகின்றன. ஜே.கே. ரௌலிங்கின் கதை நமக்கு உணர்த்துவது போல, தோல்விகள் ஒருபோதும் நம் பயணத்தின் முடிவு அல்ல,அவை அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கான தொடக்கப்புள்ளிகள். ஒரு தோல்வியின்போது நாம் மேற்கொள்ளும் சுயபரிசோதனையே நம்மைப் பலப்படுத்தி, அடுத்த வெற்றிக்கு வழி வகுக்கும்.


ஆகவே, நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு தோல்வியையும் வெறுமனே ஒரு தோல்வியாக கறுதாமல், அது நமக்குக் கற்றுத்தரும் விலைமதிப்பற்ற பாடமாக ஏற்று நடப்போம். நாம் விழும் ஒவ்வொரு முறையும், முன்பை விட அதிக பலத்துடன் எழுந்து நிற்போம். ஏனெனில், நாம் பெறும் வெற்றிகள் நமக்கு கைதட்டல்களைத் தந்தாலும், நம்மை ஒரு சிறந்த மனிதராக உருவாக்குவது நாம் கடந்து வந்த தோல்விகளின் அனுபவங்களே. அந்த அனுபவங்கள்தான் நம்மை இந்த உலகத்தின் முன் தலைநிமிர்ந்து நிற்கச் செய்கிறது.

கவிஞர் ரஸீனா ரமீஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

# குன்றக்குடி அடிகளார்

## கட்டுரை

**பிறப்பு, கல்வி**



பழைய தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறையை அடுத்துள்ள திருவாளப்புத்தூர் அருகே உள்ள சிறுகிராமமாகிய நடுத்திட்டு (வைத்தீஸ்வரன் கோயி- திருப்பனந்தாள் சாலையில் உள்ளது) என்னும் சிற்றூரில் சீனிவாசம் பிள்ளைக்கும் சொர்ணத்தம்மாளுக்கும் ஜூலை 11, 1925-ல் கடைசிக்குழந்தையாக குன்றக்குடி அடிகளார் பிறந்தார். இயற்பெயர் அரங்கநாதன்.

குன்றக்குடி அடிகளாரின் அண்ணன் கோபாலகிருஷ்ணன் சிதம்பரம் அண்ணாமலைப் பல்ககலையில் படிப்பதற்காக அவர் குடும்பம் சிதம்பரத்திற்கு இடம்பெயர்ந்தது.சிதம்பரம் அருகே திருவேட்களம் என்னும் ஊரில் வாடகைவீட்டில் வசித்தனர். பல்கலை கழகப் பேராசிரியர்களுக்கு பால் கொண்டுசென்று அளித்தபோது அவர்களிடம் அணுக்கமான குன்றக்குடி அடிகளார் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ,ரா.பி. சேதுப்பிள்ளை , சுவாமி விபுலானந்தர் ஆகியோரிடம் அணுக்கமாகி தமிழார்வத்தை அடைந்தார்.

குன்றக்குடி அடிகளாரின் தமையன் கோபாலகிருஷ்ணன் புதுக்கோட்டை மாவட்டம் கடியாப்பட்டி என்னும் ஊரில் தமிழாசிரியப் பணியில் சேர்ந்தார். குன்றக்குடி அடிகளார் அங்கேயே தன் பள்ளிப்படிப்பை தொடர்ந்தார். தருமபுரம் மடத்தில் துறவியாக ஆனபின் 1945- 1948-ம் ஆண்டில் தமிழ் கற்று வித்வான் பட்டம் பெற்றார். குன்றக்குடி இளைய ஆதீனமாக பதவி ஏற்றபின் து.ச.துரைசாமிக் குருக்களிடம் சம்ஸ்கிருதமும் ஆகமங்களும் கற்றுக்கொண்டார்.

**தனிவாழ்க்கை**

தருமபுரம் ஆதீனம் குன்றக்குடி அடிகளாரை துறவுபூணும்படி வழிகாட்டினார். தன் பதினேழரை வயதில் 1942 இறுதியில் தருமபுரம் ஆதீனத்திடமிருந்து யாத்திரைக்காஷாயம் என்னும் முதல்நிலைத் துறவை பெற்றுக்கொண்டார். அப்போது அவருக்கு கந்தசாமிப் பரதேசி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. துறவின் நெறிப்படி குன்றக்குடி அடிகளார் தெற்கே செல்லும்படி தன் ஆசிரியரிடமிருந்து ஆணைபெற்று மதுரை, திருநெல்வேலி, கன்யாகுமரி வரை 47

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

### தனிவாழ்க்கை

நாட்கள் நடந்து பிச்சை எடுத்தபடிச் சென்று திரும்பியபின் குருவிடம் மந்திரகாஷாயம் என்னும் அடுத்தநிலை துறவைப் பெற்றுக்கொண்டார். 1945-ல் தருமபுரி அம் ஆதீனத்தின் கட்டளைத் தம்புரான் என்னும் பதவியை அடைந்தார்.


ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (1925-1995)

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மடத்தின் பொறுப்பை ஏற்கவேண்டும் என குன்றக்குடி மடம் கைலாசத்தம்புரான் கேட்டுக்கொண்டதற்கிணங்க தருமபுரம் ஆதீனம் ஆசியுடன் செப்டெம்பர் 5, 1949-ல் குன்றக்குடி மடத்தின் ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு ஆறுமுகதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தன் இளவலாக குன்றக்குடி அடிகளாரை நியமித்தார். அவருக்கு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்று பெயர் சூட்டப்பட்டது.

குன்றக்குடி மடத்தில் 33 மாதங்கள் இளைய ஆதீனமாக இருந்த குன்றக்குடி அடிகளார் அந்த மடத்தின் 44-வது ஆதீனமர்த்தர் திருப்பெருந்திரு ஆறுமுகதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பரிபூரணம் அடைந்தபின் ஜூன் 16, 1952-ல் அந்த மடத்தின் 45-வது குருமகாசன்னிதானமாக பதவி ஏற்றார். அதன் பின் குன்றக்குடி அடிகளார் என்றே அழைக்கப்படலானார்.

### இதழியல்

குன்றக்குடி அடிகளார் 1954-ல் மணிமொழி என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை நடத்தினார் . சில ஆண்டுகள் அந்த இதழ் இலக்கிய இதழாக வெளிவந்தது.
குன்றக்குடி அடிகளார் 1959 முதல் தமிழகம் என்னும் மாத இதழை தொடங்கினார். இடையில் ஓர் இடைவெளியுடன் அவ்விதழ் 1976 வரை வெளிவந்தது
குன்றக்குடி அடிகளார் 1980 முதல் நமது சிந்தனை என்ற இதழை தொடங்கினார். சிந்தனை என அது பெயர் மாற்றம் பெற்றது. மக்கள் சிந்தனை என்ற பெயரில் வெளிவருகிறது
தெய்வீகப்பேரவை சார்பில் அருளோசை என்னும் இதழை நடத்தினார்
சுதேசி விஞ்ஞான இயக்கம் சார்பில் அறிக அறிவியல் என்னும் இதழை நடத்தினார்

### இதழியல்

தெய்வீகப்பேரவை சார்பில் அருளோசை என்னும் இதழை நடத்தினார் சுதேசி விஞ்ஞான இயக்கம் சார்பில் அறிக அறிவியல் என்னும் இதழை நடத்தினார்

### இலக்கியப்பணிகள்

1946-ல் சி.என்.அண்ணாத்துரை திராவிட நாடு இதழில் மா. இராசமாணிக்கனார் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சி என்னும் நூலுக்கு மறுப்பாக அன்பரது ஆராய்ச்சியும் அறைகூவல்களும் என்னும் கட்டுரை எழுதியிருந்ததை மறுத்து ஜகந்நாதாச்சாரியார் என்பவர் எழுதிய தார்மீக இந்து என்னும் இதழில் அறிஞரின் ஆராய்ச்சியும் விளக்கமும் என்னும் தலைப்பில் தொடர் ஒன்றை எழுதினார். தொடர்ச்சியாக பெரியபுராணம், சைவசித்தாந்தம் சார்ந்து ஏராளமான கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.



### திருக்குறள் பேரவை

1973-ல் திருக்குறள் பேரவை என்னும் அமைப்பை உருவாக்கி திருக்குறள் பற்றிய ஆய்வரங்குகளை ஒருங்கிணைத்தார்

### பேச்சாளர்

கட்டளைத்தம்புரானாக இருக்கையிலேயே குன்றக்குடி அடிகளார் பேச்சாளராக அறியப்பட்டார். புலவர் த.குருசாமி 1971-ல் எழுதிய தமிழகம் என்னும் நூலில், சரோஜினி நாயுடு மறைந்தபோது 1949-ல் குன்றக்குடி அடிகளார் ஆற்றிய பேருரையை நினைவுகூர்ந்து எழுதியிருக்கிறார்.

குன்றக்குடி அடிகளார் தருமபுர ஆதீனத்தில் கட்டளைத் தம்புரானாக இருந்த காலத்தில் 'தருமிக்கு பொற்கிழி அளித்த வரலாற்றில் குற்றம் செய்தவர் சிவபெருமானா நக்கீரரா?' என்னும் தலைப்பில், மு.ஆறுமுக தேசிகர் நடுவராக அமர்ந்திருக்க, நக்கீரரை ஆதரித்து முதல் உரையை ஆற்றினார்.

## தமிழ்நாடு தெய்வீகப்பேரவை

தமிழக ஆலயங்களை பாதுகாக்கவும், சமயம் பரப்பவும் வெவ்வேறு மதத்தலைவர்கள் மற்றும் ஆதீனங்களை பங்கெடுக்கச்செய்து தமிழ்நாடு தெய்வீகப்பேரவை என்னும் அமைப்பை 1966-ல் குன்றக்குடி அடிகளார் உருவாக்கினார்.

## சமூகப்பணிகள்

### சமூகசீர்திருத்தம்

குன்றக்குடி அடிகளார் மானுடநேய சீர்திருத்தங்களை சமூகவாழ்க்கையில் உருவாக்க விரும்பினார். சாதிவேறுபாடுகளையும், தனிப்பந்தி முறையையும் அவர் ஏற்கவில்லை. மனிதர்கள் சுமக்கும் பல்லக்கில் ஏறியதில்லை.

1956-ல் குன்றக்குடி அடிகளாரும் ஈ.வெ.ராமசாமிப் பெரியாரும் குன்றக்குடி ஆதீனத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் நிகழ்த்திய உரையாடலில் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் மதத்தின் சாதியடிப்படையிலான ஒடுக்குமுறையைச் சுட்டிக்காட்ட, குன்றக்குடி அடிகளார் அதை ஏற்றுக்கொண்டார்.

### மத ஒற்றுமை

தமிழகத்தில் மத ஒற்றுமைக்காக தெய்வீகப்பேரவை வழியாக பணியாற்றினார். 1981-ல் இராமநாதபுரம் இனக்கலவரம், 1981-ல் புளியங்குடியில் நடந்த கலவரம், 1982-ல் மண்டைக்காட்டில் நடந்த கலவரம் ஆகியவற்றில் அமைதி திரும்புவதற்காக நடைபயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்தார்.

### வகித்த பதவிகள்

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு இயக்கத் தலைவர்
தமிழ்நாடு திருவருட்பேரவை தலைவர்
கிராமத் திட்டக்குழு நெறியாளர்
தமிழக மேலவை உறுப்பினர்

**வகித்த பதவிகள்**

உறுப்பினராக இருந்த குழுக்கள்
இந்திய அரசு சமூகநலக்குழு
தமிழக அரசு திட்டக்குழு
தமிழக அரசு சமூக பண்பாட்டு கல்வி மறுமலர்க்கிச்க்குழு
தமிழநாடு இந்து சமய அறநிலைய துறை உயர்மட்ட ஆலோசனைக்குழு
தமிழ் பல்கலைக்கழ ஆட்சிக்குழு
இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பக்குழு
தமிழ்நாடு அரசு மதுவிலக்கு பிரச்சாரக்குழு
தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தக்குழு
தஞ்சை தமிழ்பல்கலைக்கழகப் பாடத்திட்ட ஆலோசனைக்குழு

**நூல்கள்**

- அறவழிகாட்டி
- சமய மறுமலர்ச்சி
- முத்துமொழிகள்
- அமுதமொழிகள்
- சொல்லமுதம்
- மண்ணும் விண்ணும்
- ஈழத்துச் சொற்பொழிவுகள்
- திருவள்ளுவர் காட்டும் அரசு
- பொங்கல் பரிசு
- குறள் செல்வம்
- அடிகளார் உவமைநயம்
- கவியரங்கில் அடிகளார்
- பெரியபுராணச் சொற்பொழிவுகள்
- நாயன்மார் அடிச்சுவட்டில்
- வாழ்க்கை விளக்கு
- திருவள்ளுவர் காட்டும் அரசியல்
- புனிதநெறி
- திருவள்ளுவர்
- குறட்செல்வம்
- வானொலியில் அடிகளார்
- நமது நிலையில் சமயம் சமுதாயம்
- மொழிவழிச் சிந்தனைகள்
- திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி விளக்கம்
- மனம் ஒரு மாளிகை
- அப்பர் விருந்து
- சமய இலக்கியங்கள்
- சிந்தனைச் செல்வம்
- தமிழும் சமயமும் சமுதாயமும்
- பாரதி யுகசந்தி
- திருவருட் சிந்தனை
- குறள் நூறு பொருளுரை
- ஆலயங்கள் சமுதாய மையங்கள்
- வாக்காளர்களுக்கு வள்ளுவர் அறிவுரைகள்
- தமிழமுது
- சைவசித்தாந்தமும் சமயமேம்பாடும்
- பாரதிதாசனின் உலகம்
- சிந்தனை மலர்கள்

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

- திருக்குறள் பேசுகிறது
- கடவுளைப் போற்று மனிதனை நினை
- சமுதாய மறுமலர்ச்சி
- சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்
- சிலம்பு நெறி
- கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்
- திருவாசகத்தேன்
- அப்பர் சுந்தரர் மாணிக்க வாசகர்
- அருள்நெறி முழக்கம்
- வாழ்க்கை நலம்
- சிந்தனைச்சொலை
- எங்கே போகிறோம்?
- மண்ணும் மனிதர்களும்
- திருக்குறள் உரை
- உசாத்துணை
- குன்றக்குடி அடிகளார் - கிருங்கை சேதுபதி. சாகித்ய அக்காதமி வெளியீடு
- தவத்திரு குன்றக்குடி அடிகளார்- தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி பொன்னீலன்
- தவத்திரு குன்றக்குடி அடிகளார் முதலாம் ஆண்டு குருபூசை மலர்.
- குன்றக்குடி அடிகளாருக்குக் கண்டனம்
- குன்றக்குடி அடிகளாரின் 96-வது பிறந்த நாள்!
- குன்றக்குடி அடிகளார் பற்றி பொன்னம்பல அடிகளார்
- குன்றக்குடி அடிகளார் - கீற்று
- குன்றக்குடி அடிகளாரும் பெரியாரும் ஏ.ஆர்.வேங்கடாசலபதி
- குன்றக்குடி அடிகளாரின் நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள்

**மறைவு**

ஏப்ரல் 14, 1995-ல் குன்றக்குடி அடிகளார் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் மறைந்தார். அவருக்குப்பின் பொன்னம்பல அடிகளார் குன்றக்குடி மடத்தின் தலைவராக ஆனார்.

**நன்றி**
https://tamil.wiki/wiki

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

என்னை வீழ்த்தவே முடியாது
என்பது நம்பிக்கை அல்ல.
வீழ்ந்தாலும் எழுவேன்
என்பதே நம்பிக்கை.

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com